# பிரதமர் மோடி மற்றும் இலங்கை பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ இடையிலான தொலைபேசி உரையாடல்

பிரதமர் நரேந்திர மோடி இலங்கை பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடன் இன்றைய தினம் உரையாடி இலங்கையில் வெற்றிகரமாக பாராளுமன்றத்தேர்தல்களை நடத்தியமைக்காக வாழ்த்துக்களையும் பகிர்ந்து கொண்டார். கொவிட் 19 சவால்களுக்கு மத்தியில் மிகவும் செயற்றிறன் மிக்கவகையில் இந்த தேர்தல்களை நடத்தி முடித்தமைக்காக பிரதமர், அரசாங்கத்துக்கும் தேர்தல் திணைக்களத்துக்கும் பாரட்டுக்களை தெரிவித்திருந்தார். அத்துடன் மிகுந்த ஆர்வத்துடன் இந்த தேர்தலில் வாக்களித்த இலங்கை மக்களையும் பாராட்டிய பிரதமர் அவர்கள் இரு நாடுகளாலும் பகிரப்படும் வலுவான ஜனநாயகத்தின் பெறுமானங்களை இது பிரதிபலிப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கை பொதுஜன பெரமுன கட்சியால் முன்னெடுக்கப்பட்ட வினைத்திறன் மிக்க தேர்தல் செயற்பாடுகளை தற்போது வெளியாகும் தேர்தல் முடிவுகள் சுட்டிக்காட்டுவதாகவும் குறிப்பிட்டுள்ள பிரதமர், இவ்விடயம் தொடர்பாக பிரதமர் கௌரவ மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் நடைபெற்ற சுமூகமான சம்பாஷனைகள் தொடர்பாக இந்த சந்தர்ப்பத்தில் நினைவூட்டியிருந்த இரு தலைவர்களும், பல ஆண்டுகள் பழைமையானதும் பல் பரிமாணத்துடனானதுமான இந்திய இலங்கை உறவினை மேலும் வலுப்படுத்துவதற்கான பகிரப்பட்ட பொறுப்பு தொடர்பாகவும் வலியுறுத்தியுள்ளனர். அத்துடன் இரு தரப்பு உறவினை சகல வழிகளிலும் முற்கூட்டியே மேம்படுத்தவேண்டியதன் முக்கியத்துவம் தொடர்பாகவும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்தியாவில் பௌத்த யாத்திரை மையமான குஷிநகரில் சர்வதேச விமான நிலையம் அமைக்கபட்டுள்ளமை தொடர்பாக பிரதமர் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களிடம் கூறிய பிரதமர், மிகவும் கிட்டிய

நாட்களில் இலங்கையிலிருந்து விருந்தினர்களை வரவேற்பதற்கு அந்த நகரம் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

கொவிட் 19 நோயினால் எதிர்கொள்ளப்பட்டிருக்கும் சவால்களை கையாள்வதற்கு இரு நாடுகளிடையிலும் தொடர்ந்தும் நெருக்கமான உறவை பேணவேண்டிய தேவை இருப்பதாக இரு தலைவர்களும் இணங்கியுள்ளனர். அத்துடன் எதிர்வரும் காலத்தில் இரு தரப்பு உறவினை புதிய மட்டத்திற்கு கொண்டு செல்ல இருவரும் உறுதிபூண்டுள்ளனர்.

******

புதுடில்லி

06 ஆகஸ்ட் 2020